
# உங்கள் காப்பீட்டு நிறுவனம் உங்கள் புகார்களைக் கேட்கிறதா ?



உங்கள் புகார்களை உங்கள் காப்பீடு நிறுவனம் தீர்க்கவில்லை
என்றால் கீழ்க்கண்ட எண்ணில் தொடர்பு கொண்டு
உங்கள் புகார்களை பதிவு செய்து அதன் நிலைமையை தெரிந்து கொள்ளவும்.

**ஐஆர்டிஏ க்ரீவன்ஸ் கால் சென்டர்**

**டோல் ஃப்ரீ எண்: 155255**

அல்லது உங்கள் புகார்களை மின்னஞ்சலும்
செய்யலாம்: complaints@irda.gov.in.
அல்லது லாக் ஆன் செய்யவும்: www.igms.irda.gov.in.

பொது விழிப்புணர்வு முயற்சி

காப்பீடு ஒழுங்கு முறை மற்றும் வளர்ச்சி ஆணைக்குழு.

INSURANCE REGULATORY AND DEVELOPMENT AUTHORITY

காப்பீட்டு மேம்பாடு. காப்பீடு எடுத்தோருக்கு பாதுகாப்பு.

www.irda.gov.in

காப்பீடு ஒழுங்கு முறை மற்றும் வளர்ச்சி ஆணைக்குழு

INSURANCE REGULATORY AND DEVELOPMENT AUTHORITY

Bima Bemisaal




# வாகனக் காப்பீடு பற்றிய கையேடு

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. இந்த கையேடு பற்றி | 1 |
| 2. வாகனக் காப்பீடு | 2 |
| 3. அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் | 5 |
| 4. பாலிசிதாரருக்கான சேவை டிஏடிகள் | 14 |
| 5. உங்களுக்கு காப்பீட்டு நிறுவனத்திடம் குறைகள் இருந்தால் | 15 |


### மறுப்புகள்

இந்த கையேடு உங்களுக்கு பொதுவான விவரங்களை மட்டுமே தருகிறது. விரிவான விவரங்களை தரவில்லை. இது ஒரு விழிப்புணர்வு முயற்சி மட்டுமே. இது சட்ட ஆலோசனை வழங்குவதில்லை.

பதிவு செய்யலாம். இது காப்பீட்டு நிறுவனங்களில் கொடுக்கப்பட்ட புகார்களையும் கண்காணிக்க உதவும். அழைப்பின்படி அந்த கால்சென்டர் புகார்படிவத்தை நிரப்புவதற்கு உதவும். காப்பீடு நிறுவனத்திடம் உங்கள் புகாரை பதிவு செய்ய தேவையான முகவரி, தொலைபேசி எண், இணையத்தளம், மின்னஞ்சல் முகவரி போன்ற விவரங்களை அனைத்தையும் தரும் முதல் வாயில் இதுதான். ஐஆர்டிஏ வின் கால் சென்டர் பாலிசிதாரர்களுக்கு இருக்கும் மாற்று வழி ஆகும். இதன் பணியாளர்கள் திங்கள் முதல் சனி வரை வாரத்தின் 6 நாட்களுக்கு காலை 8 முதல் இரவு 8 மணி வரை 12 மணி நேரம் சேவை தருகிறார்கள். இவர்கள் இந்தி, ஆங்கிலம் மற்றும் பல இந்திய மொழிகளில் சேவை தருகிறார்கள்.

ஐஆர்டிஏவில் புகார் பதிவு செய்யப்பட்டபிறகு, அதை தீர்ப்பதற்கு புகாரை காப்பீட்டு நிறுவனத்திடம் எடுத்துச் செல்லும். புகாரை தீர்க்க நிறுவனத்திற்கு 15 நாட்கள் அவகாசம் வழங்கப்படும். தேவைப்பட்டால், ஐஆர்டிஏ, விசாரணைகள், ஆய்வுகள் மேற்கொள்ளும். எங்கு தேவையோ அங்கு பொதுமக்கள் குறைதீர்ப்பு விதி 1998 இன்படி காப்பீட்டு குறைதீர்ப்பாளரை அணுகும்படி ஐஆர்டிஏ பரிந்துரைக்கலாம்.



## 1. இந்த கையேடு பற்றி

காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணைக்குழுவால் (ஐஆர்டிஏ) இந்த கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ÁõPÚU Põ¨¥k பற்றிய பொதுவான தகவல்களுக்கு ஒரு வழிகாட்டி மட்டுமே. இதில் கொடுக்கப்பட்டுள்ள எந்த ஒரு தகவலும், காப்பீட்டு பாலிசியில் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மிஞ்சாது.

உரிமம் பெற்ற முகவர், தரகர் அல்லது ஐஆர்டிஏ விடம் பதிவு பெற்ற காப்பீட்டு நிறுவனத்தை அணுகி பாலிசியின் குறிப்பிட்ட தகவல்கள் மற்றும் கூடுதல் விவரங்களைப் பெற்று கொள்ளவும்.

## 2. வாகனக் காப்பீடு

- **வாகனக் காப்பீடு என்றால் என்ன ?**

  வாகனக் காப்பீடு அந்த வாகனச் சொந்தக்கார்களுக்கு பின் வரும் காப்பீடு தருகிறது: 1. வாகனத்திற்கு ஏற்படும் சேதம் 2. வாகனச் சொந்தக்காரார்களுக்கு சட்டபூர்வமாக ஏற்படும் மூன்றாவது நபர்களுக்கான பொறுப்பு. தேர்டு பார்டி காப்பீடு என்பது சட்டபூர்வமாக தேவைப்படுகிறது. பொது இடத்தில் வாகனத்தைப் பயன்படுத்துவதால் மூன்றாவது நபரின் உயிருக்கு அல்லது சொத்துக்கு ஏற்படும் சேதத்திற்கு வாகன சொந்தக்காரர் பொறுப்பாகிறார். மோட்டார் வாகனச் சட்டம் 1988இன்படி, வாகனத்தை காப்பீடு இல்லாமல் பொது இடங்களில் ஓட்டுவது தண்டனைக்குறியது.

- **வாகனக் காப்பீட்டின் வகைகள்:**

  பெரும்பாலும் வாகனக் காப்பீட்டில் இரண்டு வகை காப்பீட்டுப் பாலிசிகள் உள்ளன:

  அ) பொறுப்புகளுக்கு மட்டுமான பாலிசி (சட்டபூர்மாகத் தேவை)

  ஆ) பேக்கேஜ் பாலிசி (பொறுப்புகளுக்கு மட்டுமான பாலிசி + ஓ.டி. கவர் எனப்படும் வாகன சேதத்திற்கான காப்பீடு)

  பொறுப்புகளுக்கு மட்டுமான பாலிசி எடுத்தால், உங்கள் வாகனத்திற்கு ஏற்படும் சேதங்களுக்கு காப்பீடு கிடைக்காது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். அதனால் பேக்கேஜ் பாலிசியை எடுப்பது அறிவுபூர்வமானது. அது பரவலான காப்பீட்டைக் கொடுக்கு. உங்கள் வாகனத்திற்கு ஏற்படும் சேதம் உட்பட.



## 5. உங்களுக்கு குறைகள் ஏதேனும் இருந்தால்:

காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணைக்குழு (ஐஆர்டிஏ)வின் வாடிக்கையாளர் விவகார பிரிவு இப்போது ஒருங்கிணைந்த குறைதீர்ப்பு மேலாண்மை முறையை (ஐஜிஎம்எஸ்) ஏற்படுத்தியுள்ளது. இது குறைகளை பதிவு மற்றும் கண்காணிக்கும் ஆன் லைன் முறை ஆகும். முதலில் நீங்கள் காப்பீட்டு நிறுவனத்திடம் உங்கள் குறையை பதிவு செய்து கொள்ள வேண்டும். அவர்கள் அளித்த பதில் உங்களுக்கு திருப்திகரமாக இல்லை என்றால்,நீங்கள் www.igms.irda.gov.in இணையதளத்திலுள்ள ஐஜிஎம்எஸ் மூலமாக காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணைகுழுவிடம் (ஐஆர்டிஏ) மேல் முறையீடு செய்யலாம்.. உங்களால் இந்த முறையில் நேரடியாக பதிவு செய்ய முடியவில்லை என்றால், உங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் வாயிலாக புகாரை கொடுக்கும் வசதியையும் ஐஜிஎம்எஸ் உருவாக்கியுள்ளது.

ஐஜிஎம்எஸ் (அதாவது இணையதளம்) மூலம் புகாரை பதிவு செய்வது தவிர, உங்கள் புகாரை மின்னஞ்சல் (complaints@irda.gov.in) மூலமாகவும், கடிதம் (முகவரி வாடிக்கையாளர் விவகாரப் பிரிவு, காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணைக்குழு, 3வது மாடி, பரிஷ்ரம் பவன், பஷீர்பாக், ஐதராபாத் 4) மூலமாகவும் அல்லது 155255 என்ற டோல் ஃப்ரீ எணில் ஐஆர்டிஏவின் கால் சென்டரிலும்

## ஐஆர்டிஏ பரிந்துள்ளப்படி பாலிசிதாரர்களின் சேவைக்கு தேவையான கால அளவுகள்

| சேவை | அதிகபட்சகாலம் |
|---|---|
| **பொதுவானது** | |
| முன்மொழிவு மற்றும் அது பற்றி முடிவு சொல்லுதல், தேவைகள் /பாலிசி வழங்குதல்/ரத்து உட்பட | 15 நாட்கள் |
| முன்மொழிவு நகலை தபாலில் பெறுதல். | 30 நாட்கள் |
| பாலிசி வழங்கப்பட்ட பிறகு தவறுகள்/முன்மொழிவு டெபாசிட்டின் ரீஃபண்டு மற்றும்கிளெய்ம் அல்லாத விசாரணைகளின் சேவை கோரிக்கைகள் | 10 நாட்கள் |
| **ஆயுள் காப்பீடு** | |
| சரண்டர் மதிப்பு/அன்யூயிட்டி/பென்ஷன் பரிசீலனை | 10 நாட்கள் |
| முதிர்வுக் கிளெய்ம்/ சர்வைவல் பலன்கள்/அபராத வட்டி வழங்கப்படாமை | 15 நாட்கள் |
| கிளெய்ம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு கிளெய்ம் தேவைகளை சொல்லுதல் | 15 நாட்கள் |
| தேவைகளை விசாரிக்காமல் இறப்பு நேர்விற்கு தொகை வழங்குதல் | 30 நாட்கள் |
| இறப்பு கிளெய்மிற்கு தொகை வழங்குதல்/விசாரணை தேவைகள் கொண்ட மறுப்புகள் | 6 மாதம் |
| **பொதுக் காப்பீடு** | |
| சர்வே அறிக்கை தருதல் | 30 நாட்கள் |
| திருத்த அறிக்கையை காப்பீட்டு நிறுவனம் பெறுதல் | 15 நாட்கள் |
| பணம் வழங்குதல்/தள்ளுபடி முதல்/திருத்த சர்வே அறிக்கையை பெற்றதும் தள்ளுபடி | 30 நாட்கள் |
| **குறைகள்** | |
| குறையை பெற்ற அத்தாட்சி | 3 நாட்கள் |
| குறை தீர்த்தல் | 15 நாட்கள் |



- **வாகனக் காப்பீட்டில் எதற்கெல்லாம் காப்பீடு கிடைக்கிறது:**

பின் வரும் ஆபத்துக்களால் வாகனத்திற்கு ஏற்படும் சேதங்களுக்கு வாகனக் காப்பீட்டின் ஓ.டி. பிரிவில் காப்பீடு கிடைக்கும்:

அ) தீவிபத்து, வெடித்தல், தானகாவே தீப்பிடித்தல், இடிமின்னல் தாக்குதல்

ஆ) திருட்டு/வீடு புகுந்து கொள்ளை/கொள்ளை

இ) வன்முறை மற்றும் வேலை நிறுத்தம்

ஈ) நிலநடுக்கம்

உ) வெள்ளம், புயல், சுறாவளி, சுழற்காற்று, ஊழிக்காற்று, நீர் சூழ்தல், ஆலங்கட்டி மழை, பனி.

ஊ) வெளியில் விபத்து

எ) சதித்திட்டம்

ஏ) பயங்கரவாதம்

ஐ) ரயில்/சாலை, உள் நாட்டு நீர் வழிகள், மின்தூக்கி, வான் வழியில் போக்கு வரத்து செய்யும்போது

ஒ) நிலச் சரிவு/பாறைச் சரிவு

- **வாகனக் காப்பீட்டில் இருக்கும் விதிவிலக்குகள் என்ன?**

வாகனக் காப்பீட்டுப் பாலிசியில் பின்வரும் நிலைமைகள் பொதுவாக விதிவிலக்கு செய்யப்பட்டுள்ளன:

- ஓட்டுனர் உரிமம் இல்லாம ஓட்டுதல்
- மதுபானம்/போதை மருந்து பயன்படுத்திவிட்டு ஓட்டுதல்
- புவியியல் வரம்புகளுக்கு அப்பாற்பட்ட விபத்துக்கள்
- வாகனத்தை சட்டத்திற்கு புறம்பாக பயன்படுத்துதல்
- மின்சாரம்/இயந்திரக் கோளாறு

- **காப்பீட்டுத் தொகையின் அடிப்படை:**

சொந்த சேதத்திற்கு:

காப்பீடு எடுத்தவர் அறிவித்த மதிப்பு என்பதன் அடிப்படையில் வாகனக் காப்பீட்டு பாலிசியின் காப்பீட்டுத் தொகை தீர்மானிக்கப்படும்.. காப்பீடு எடுத்தவர் அறிவித்த மதிப்பு என்பது அந்த வாகனத் தயாரிப்பாளரின் தற்போதைய மதிப்பு மற்றும் வாகனத்தின் ஆயுளுக்கு ஏற்ற தேய்மானத்தின் படி நிர்ணயிக்கப்படுகிறது.

தேர்டு பார்டிக்கு:

மோட்டார் வாகனச் சட்டம் 1988இன் கீழ் இந்த காப்பீடு எடுப்பது சட்டபூர்வமானது. வாகனச் சொந்தக்காரர் மற்றும் ஓட்டுனருக்கு கட்டாய விபத்துக் காப்பீடும் இதில் அடங்கியுள்ளது. வேறு ஆபத்துக்களுக்கும் பாலிசியில் காப்பீடு நீடிக்கபடலாம். அதாவது வாகனத்தில் பயணம் செய்வோருக்கான விபத்துக் காப்பீடு, ஒட்டுநருக்கு, சட்டபூர்வமாகக் கிடைக்கும் தொகையைத் தவிர, பணி இழப்புக்கான காப்பீடு போன்றவை.



**கிடைக்குமா ?**

ப. கிடைக்கும். நீங்கள் எந்த அலுவலகத்தில் பாலிசி எடுத்தீர்களோ அந்த அலுவலகத்தை அணுகி எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். பாலிசியின் நகலை வழங்குவதற்கு ஒரு சிறு கட்டணம் வசூலிக்கப்படும்.

**கே. மோட்டார் வாகனத்திற்கான கிளெய்மிற்கு என்ன ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் ?**

ப. பொதுவாக பின் வரும் ஆவணங்கள் தேவை. இருந்தாலும் உங்கள் பாலிசியில் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலைப் பார்க்கவும் - நிரப்பப்பட்ட கிளெய்ம் படிவம், வாகனத்தின் ஆர்.சி. நகல், இழப்பு பற்றிய மதிப்பிட்டீன் ஒரிஜினல், பழுது பார்த்த பில்லின் ஒரிஜினல் மற்றும் பணம் செலுத்திய ரசீது. கேஷ்லெஸ் வசதி இருந்து அதைப் பயன்படுத்திக் கொண்டால் பழுது பார்த்த பில்லின் ஒரிஜினலை மட்டும் கொடுத்தால் போதும். மேலும் தேவைப்பட்டால் எஃப் ஐ ஆர் கொடுக்க வேண்டும். திருட்டு போனதற்கு கிளெய்ம் செய்ய, கண்டு பிடிக்க முடியவில்லை என்ற சான்றை சமர்ப்பிக்க வேண்டும்.

**கே. எனது வாகனத்தை வாங்குபவருக்கு நான் காப்பீட்டை மாற்றிக் கொடுக்க முடியுமா?**

ப. முடியும். உங்கள் வாகனத்தை வாங்குபவருக்கு நீங்கள் காப்பீட்டை மாற்றிக் கொடுக்கலாம். அவ்வாறு மாற்றம் செய்வதற்கு நீங்கள் காப்பீட்டு நிறுவனத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும். புதிய முன்மொழிவுப் படிவம் நிரப்பிக் கொடுக்கப்பட வேண்டும். பாலிசி காலவதியாகும் வரையுள்ள தேதிவரை என்.சி.பிக்கான வித்தியாசத் தொகை செலுத்த வெண்டும் அதோடும் மாற்றுவதற்கான ஒரு கட்டணமும் செலுத்த வேண்டும். வாகனத்தை மாற்றிக் கொடுத்த 14 நாட்களுக்குள் முழுமையான/பேக்கேஜ் பாலிசியை மாற்றிக் கொதுக்க வேண்டும். இல்லையென்றால் வாகனத்திற்கு ஏற்படும் சேதங்களுக்கு கிளெய்ம் தொகை கிடைக்காது.

**கே. வட்டாரப் போக்குவரத்து அலுவலகப் பதிவேடுகளில் வாகனம் என் பெயரில் மாற்றப்பட்ட பிறகும் நான் முந்தைய உரிமையாளின் பெயரிலேயே காப்பீட்ட்டை தொடரலாமா?**

ப. முடியாது. வாகனம் யார் பெயரில், எந்த முகவரியில் பதிவாகி இருக்கிறதோ காப்பீடும் அதே பெயரில், அதே முகவரியில் இருக்க வேண்டும். இல்லையென்றால் கிளெய்ம் வழங்கப்படாது. இதற்கு புதிய முன்மொழிவுப் படிவம் நிரப்பிக் கொடுக்க வேண்டும். பாலிசியை மாற்றம் செய்வதற்கு ஒரு சிறு கட்டணம் உண்டு.

**கே. நான் காப்பீட்டுப் பாலிசியை தொலைத்துவிட்டால் எனக்கு அதன் நகல்**



## 3. வாகனக் காப்பீடு பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**கே. நான் எந்த வாகனக் காப்பீடு எடுக்க வேண்டும்? நான் முழுமையான காப்பீடு எடுக்க வேண்டுமா? அல்லது பொறுப்புகளுக்கு மட்டுமான காப்பீட்டை எடுக்க வேண்டுமா?**

ப. இந்தியாவின் பொதுச் சாலைகளில் ஓடும் அனைத்து வாகனங்களுக்கும் சட்டபூர்வமாக தேர்டு பார்ட்டி லயபிலிடி பாலிசி எடுக்க வேண்டியது கட்டாயமாகும். இது உங்களால் மற்றவர்களுக்கு ஏற்படும் காயம் மற்றும் சேதங்களுக்கு ஏற்படும் பொறுப்பாகும். மேலும் உங்கல் வாகனத்திற்கு ஏற்படும் சேதம் மற்றும் இழப்புகளுக்காக முழுமையான/பேக்கேஜ் பாலிசி எடுப்பது புத்திசாலித்தனம் ஆகும். இதன் மூலம் பொறுப்புகள் மற்றும் உங்கள் வாகனத்திற்கான சேதங்கள் இரண்டிற்கும் காப்பீடு கிடைக்கிறதும். லயபிலிடி காப்பீட்டிற்கு ஆக்ட் ஒன்லி காப்பீடு என்றும் பெயர்.

**கே. பிரீமியம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

ப. பிரீமியம் பல காரணிகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. உங்கள் வாகனத்திற்கு ஏற்படும் சேதத்திற்கு பல காப்பீட்டு நிறுவனங்கள் ஒரே மாதிரியான காப்பீட்டிற்கு வெவ்வேறு விதமாக பிரீம்யம்கள் பெறுகின்றன. பலவற்றை பரிசீலிக்கவும்: ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்களின் பிரீமியத்தை கேட்டு ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது. பல காப்பீட்டு நிறுவனங்களின் இணையதளத்தைப் பார்க்கவும்: அது பிரீமியத்தை ஒப்பிட்டுப் பார்க்க உதவும். கைழ்வுகள், காப்பீடு மற்றும் ஐடிவி போன்றவை ஒரு நிறுவனத்திடம்

குறைவாகவும் மற்ற நிறுவனத்தில் அதிகமாகவும் இருக்கும். இது கிளெய்ம் செய்யும் நேரத்தில் அதன் தொகையை பாதிக்கக்கூடும்.

உங்கள் முகவருக்கு பின் வரும் தகவல்களைத் தரவும். இது பொதுவாக உங்கள் பிரீமியத்தை தீர்மானிக்க உதவும்: வாகனப் பதிவு விவரங்கள், என்ஜின் எண், சேஸி எண், வாகனத்தின் வகை, கொள்ளளவும், இருக்கை அளவு போன்றவை (உண்மையில் தேவைப்படும் இந்த விவரங்கள் அனைத்தும் ஆர்சி புத்தகம்/கார்டில் இருக்கும். இதன் நகலையும் கொடுக்கலாம்). மேலும் வரி விவரங்கள், வாகனத்தின் ஃபிட்னஸ் சான்று, ஓட்டுனர் விவரங்கள் - வயது, பாலினம், கல்வித் தகுதி, உரிம காலம், காப்பீட்டு வரலாறு இருந்தால் அது.

உங்கள் வாகனத்தின் சேதத்திற்கான காப்பீடு வெவ்வேறு நிறுவனத்தால் வெவ்வேறுவிதமாக மதிப்பிடப்பறுகிறது. அவர்களின் விகிதம் காப்பீடு ஒழுங்கு முறை மற்றும் வளர்ச்சி ஆணைக்குழுவிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. பிரீமியத்தை தீர்மானிக்கும் காரணிகளில் பின் வருவனவும் அடங்கும்: வாகனத்தின் ஆயுள்,; தள்ளுபடிகள்/லோடிங்க், உரித்தாகும் போனஸ்/லோடிங்/தள்ளுபடிகள் மற்றும் கடந்த காலத்தில் கிளெய்ம் செய்யப்பட்ட வரலாறு போன்றவை பிரீமியத்தை கணக்கிடும்போது கருதில் கொள்ளப்படுகிறன. காப்பீடு எடுத்தவர் அறிவித்த மதிப்பு (ஐடிவி)

தேர்டுஒ பார்டி லயபிலிடி பிரீமிய விகிதம் ஐஆர்டிஏ-வால் வகுக்கப்பட்டுள்ளது

காப்பீட்டி இடைவெளி விழுந்தால், வாகன பரிசோதனை தேவைப்படும். அதற்கு கூடுதல் செலவுகளை ஏற்க வேண்டும்.



வசூலிக்கப்படும்.

**கே. மோட்டார் வாகனச் சட்டத்தின்படி காப்பீட்டுச் சான்று என்றால் என்ன?**

ப. மத்திய மோட்டார் வாகன விதிகள் 1989 விதி 141ன் படி காப்பீட்டுச் சான்று படிவம் 51 இல் மட்டுமே தரப்பட வேண்டும். பாலிசியைத் தவிர வாகன காப்பீட்டில் மட்டுமே, காப்பீட்டு நிறுவனம் சட்டபூர்வமாக காப்பீட்டுச் சான்று தர வேண்டும். இந்த ஆவணம் எப்போதும் வாகனத்தில் இருக்க வேண்டும். வீட்டில்/அலுவலகத்தில் பாலிசியை வைத்திருக்க வேண்டும்.

**கே. எனது வாகனத்தில் சிஎன்ஜி/எல்பிஜி கிட் பொருத்தினால் அதை காப்பீட்டு நிறுவனத்திற்கு தெரிவிக்க வேண்டுமா?**

ப. உங்கள் வாகனத்தில் சிஎன்ஜி/எல்பிஜி கிட் பொருத்தினால் அதை உங்கள் வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சொல்லி அதை ஆர்சி புத்தகத்தில் பதிவு செய்து வாங்க வேண்டும். அந்த கிட்டிற்கு ஓ.டி. மற்றும் டி.பி. பிரிவின் கீழ் காப்பீடு எடுக்க கூடுதல் பிரீமியம் செலுத்துவதற்கு காப்பீட்டு நிறுவனத்திடம் தெரிவிக்க வேண்டும்.

**கே. பொது இடங்களில் வானகத்தை ஓட்டும்போது நான் வாகனத்தில் வைத்திருக்க வேண்டிய அவணங்கள் என்ன**

ப.
- காப்பீட்டுச்சான்றிதழ்
- ஆர்சி புத்தகத்தின் நகல்
- மாசு கட்டுப்பாடு சான்றிதழ்
- வாகனத்தை ஓட்டும் நபரின் ஓட்டுனர் உரிமம்.

அது இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.50 முதல் தனியார் கார்கள் மற்றும் வர்த்தக வாகனங்களுக்கு ரூ.500 வரை இருக்கும். இது வாகனத்தின் கொள்ளளவு/எடுத்ச் செல்லும் அளவிற்க்கு ஏற்ப அதிகரிக்கும். இருந்தாலும் சில நேரங்களில் காப்பீட்டு நிறுவனம், வாகனத்தின் ஆயுள் மற்றும் அடிக்கடி கிளெய்ம் செய்திருப்பதன் அடிப்படையில் கூடுதல் எக்ஸஸ் விதிக்கும்.

**கே. பாலிசியில் எதாவது மாற்றம் செய்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

ப. பாலிசியில் ஏதாவது கிளெய்ம் இருந்தால், அதை குறிப்பிட்டு காப்பீட்டு நிறுவனம் அதில் எழுதிக் கொடுக்கும். மாற்றத்திற்கான ஆதாரத்தை, அதற்கான விண்ணப்பக்கடித்தத்துடன் கொடுத்து அந்த மாற்றத்தை பாலிசியில் எழுதி வாங்கிக்கொள்ள வேண்டும். எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது சரியாக இருக்கிறதா என்று பார்க்கவும்.

**கே. நான் ஒரு குறிப்பிட்ட நகரத்தில் மட்டும் பயன்படுத்தினால், உரித்தாகும் பிரீமியம் விகிதம் என்ன ?**

ப. பிரீமியம் விகிதத்தைப் பொறுத்தவரை வாகனம் எங்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதுதான் முக்கியம் (எங்கு பயன்படுத்தப்படுகிறது என்பது அல்ல). உங்கள் வாகனம் சென்னையில் பதிவு செய்யப்பட்டிருந்தால் ஜோன் ஏ விற்கு உரிய விகிதம் உரித்தாக்கு. நீங்கள் வேறு ஊருக்கு மாற்றம் செய்தாலும் அதே விகிதம் தொடர்ந்து உரித்தாகும். அதே போல ஒரு சிறிய ஊரில் உங்கள் வாகனம் பதிவு செய்யப்பட்டிருந்தால் ஜோன் பிக்கு உரிய பிரீமியம் விகிதம் உரித்தாகும். அதன் நீங்கள் பெரிய நகரத்திற்கு வந்தாலும் ஜோன் பியின் விகிதமே



**கே. எனது தேவைக்கு ஏற்ற காப்பீடு வரம்பு என்ன ?**

ப. உங்கள் வாகனத்திர்கு சேதம் ஏற்பட்டால், காப்பீடு தொகைக்கு இன்ஷ்யூர்டு டிக்ளர் வேல்யூ என்று பெயரி. அது வாகனத்தின் தற்போதைய சந்தை மதிப்பை பிரதிபலிக்கும் . தேர்டு பார்டி லயபிலிடி காப்பீடு என்பது மூன்றாம் நபருக்கு ஏற்படும் காயங்களுகு வரம்பின்றி காப்பீடு தரும். இருந்தாலும் மூன்றாம் நபருக்கான சொத்து சேதங்களுக்கு காப்பீட்டுத் தொகையின் வரம்பு ரூ.750000. மூன்றாம் நபர் சொத்து சேதத்திற்கு இழப்பாக ரூ.6000 கொடுக்கும் காப்பீட்டையும் காப்பீடு எடுப்பவர் தேர்வு செய்யலாம். இதனால் பொறுப்பிற்கு மட்டுமான பிரீமியம் குறையும்.

**கே. பாலிசியின் கால அளவு என்ன ?**

ப. இந்த பாலிசி பொதுவாக ஒரு ஆண்டு அமலில் இருக்கும். அதை புதுப்பிக்கும் தேதியில் புதுப்பிதாக வேண்டும். உரிய காலத்தில் பிரீமியம் செலுத்த வேண்டும். பிரீமியம் செலுத்த காப்பீட்டு நிறுவனம் கருணைக் காலம் வழங்கும். ஒரு நாள் பாலிசி காலவதியானாலும், வாகனம் பரிசோதிக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, பாலிசி 90 நாட்களுக்கும் மேல் காலவதியாகியிருந்தால், அதில் சேர்ந்திருக்கும் நோ கிளெய்ம் போனஸூம் (என் சி பி) இழக்கப்படும்.

**கே. நோ கிளெய்ம் போனஸ் என்றால் என்ன ?**

£. நோ கிளெய்ம் போனஸ் (என் சி பி) என்பது முந்தைய காலத்தில் கிளெய்ம் எதுவும் செய்யப்படாமல் இருப்பதால் சேரும் பலன் ஆகும். தற்போது இருக்கும் வழக்கப்படி இது உங்கள் வாகனத்திற்கான சேதக் காப்பீடில் (லயபிலிடி பிரீமியத்தின் மீது அல்ல) 20% ஆக இருக்கிறது. அது படிப்படியாக கிளெய்ம் இல்லாத

ஆண்டுகளுக்கு ஏற்ப அதிகபட்சமாக 50% எட்டிவிடும். இருந்தாலும் கிளெய்ம் செய்யப்பட்டுவிட்டாலும் அடுத்த பாலிசியில் நோ கிளெய்ம் போனஸ் கிடைக்காது. என் சி பி காப்பீடு எடுத்தவருக்கு கொடுக்கப்படுகிறது. காப்பீடு செய்யப்பட்ட வாகனத்திற்கு கொடுக்கப்படுவதில்லை. அதனால் வாகனம் கை மாறினால், காப்பீடு பாலிசி புதிய சொந்தகாரரின் பெயரில் மாற்றப்படும். ஆனால் என் சி பி மாற்றப்படாது. எனவே மீதமிருக்கும் பாலிசி காலத்திற்கு புதிய சொந்தக்காரர் என்.சி.பி வித்தியாசத்தை செலுத்த வேண்டும். முந்தைய சொந்தக்காரர், தனது பழைய காரை வாங்கியவருக்கு காப்பீட்டை மாற்றவில்லை என்றால், அந்த என்.சி.பி-யை அவர் தனது புதிய காருக்குப் பெறமுடியும்.

**கே.** **நான் எனது காப்பீட்டை வேறு நிறுவனத்திற்கு மாற்ற விரும்பினால் நோ கிளெய்ம் போனஸ் இழக்கப்படுமா?**

**ப.** ஆம். காப்பீடைப் புதுப்பிக்கும்போது நீங்கள் காப்பீட்டு நிறுவனத்தை மாற்றிக்கொண்டால், என்சிபி வசதி கிடைக்கும். நீங்கள் தற்போதைய காப்பீட்டு நிறுவனம் அனுப்பிய புத்துப்பிக்கும் நோட்டீஸில் நோ கிளெய்ம் போனஸிற்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும். அதை கொடுக்க முடியவில்லை என்றால், காலவதியாகும் ஒரிஜினல் பாலிசியையும் அதோடு அந்த பாலிசியில் நீங்கள் கிளெய்ம் எதுவும் செய்யவில்லை என்ற சான்றும் கொடுக்க வேண்டும். எனவே ஆதரம் புதுப்பிக்கும் நோட்டீசாகவோ அல்லது முந்தைய காப்பீட்டு நிறுவனத்திடம் என்.சி.பி பெற தகுதியுள்ளவர் என்ற கடிதமாவோ இருக்கலாம்.



**கே.** **தள்ளுபடிகள் என் பிரீமியத்தைக் குறைக்குமா?**

**ப.** உங்கள் வாகனத்திற்கு ஏற்படும் சேதத்திற்கான பிரீமிமதின் மீது என்.சி.பி யைத் தவிர கூடுதல் தள்ளுபடிகளும் கிடைக்கின்றன. இதற்காக ஆட்டோமொபைல் அசோசியேஷன் ஆஃப் இந்தியா உறுப்பினர், வின்டேஜ் கார்ஸ் (பழங்கால கார்கள் என்று வின்டேஜ் அண்டு கிளாசிக் கார் கிளப் ஆஃப் இந்தியா மூலம் சான்று பெற்ற தனியா கார்கள்): ஆட்டோமோடிவ் ரிசர்ச் அசோசியேஷன் ஆஃப் இந்தியா(ஏ ஆர் ஏ ஐ), புனே வகுத்துள்ளபடி திருட்டை தடுக்கும் கருவி பொருத்தியிருத்தல்: பார்வையர்றோர்/மாற்றுத்திறனாளிகள் மற்றும் மன நலக் குறைபாடு கொண்தவர்களுக்காக போக்குவரத்து ஆணைக்குழு ஆர்சியில் சான்றுரைத்த விசேஷமான/மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள் போன்றவைகளுக்கு கூடுதல் தள்ளுபடிகள் கிடைக்கும்.

**‘‘லயபிலிடி ஒன்லி பாலிசிக்கு’’** தேர்டு பார்டி சொத்து சேதத்திற்கான காப்பீட்டைக் குறைத்துக் கொண்டால் மட்டுமே தள்ளுபடி கிடைக்கும்.

(டிபிபிடி) ரூ.750000 லிருந்து ரூ.6000

**கே.** **சேவை வரி உரித்தாகுமா. அப்படியென்றால் எவ்வளவு?**

**ப.** B® சேவை வரி செலுத்த வேண்டும். அது அவ்வப்போது இருக்கும் வரிச்சட்டங்களுக்குட்பட்டிருக்கும்.

**கே.** **டிடக்டிபிள் என்றால் என்ன?**

**ப.** டிடெக்டிபிள் அல்லது எக்ஸஸ் என்பது கிளெமிற்கும் அதிகமான தொகை ஆகும். பெரும்பாலான வாகனங்களுக்கு வழக்கமான நிலையான/கட்டாயமான எக்ஸஸ் தொகை உண்டு.